**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No.60 /2022**

**Deposition of Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | பெமினா பேகம் | Taluk | |
| Husband Name | அன்பழகன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 22.01.2025.** | | | |

**எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் முஸ்லீம் மதத்தை சேர்ந்தவர். எனது கணவர் இந்து மதத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். நான் பி.இ படித்துள்ளேன். எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். நானும், 1ம் எதிர்மனுதாரரும் காதலித்து வந்த விவரம் 2ம் எதிர்மனுதாரருக்கு தெரியும் என்றால் சரிதான். நான் 1ம் எதிர்மனுதாரரை காதலித்து வந்தபோது நான் 1 தடவை1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்றேன். எங்கள் இருவருக்கும் நடந்த திருமணம் 2ம் எதிர்மனுதாரரின் சம்மதத்துடன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது என்றால் சரிதான். உறவினர்களும் இருந்தார்கள். எனது தரப்பில் எனது பெற்றோரோ , உறவினர்களோ கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

2) எனக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமண வரவேற்பு புலியூர் பெரியகாண்டியம்மன் திருமண மஹாலில் நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின்போது 1ம் எதிர்மனுதாரர் 1 பவுனில் தாலி போட்டார் என்றால் சரிதான். திருமணத்திற்கான செலவு, வரவேற்பிற்கான செலவு அனைத்தையும் 1ம் எதிர்மனுதாரர் பார்த்து கொண்டார் என்றால் சரிதான். தாலி 1 பவுனா என்று எனக்கு தெரியாது. அவர் போட்ட தாலிதான் அணிந்துள்ளேன். திருமணத்தின் பயனாக எனக்கு ஒரு

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

ஆண்குழந்தை உள்ளது. வளைகாப்பு செலவை 1ம் எதிர்மனுதாரர்தான் பார்த்து கொண்டார் என்றால் இல்லை, எனது பெற்றோர் பார்த்தார்கள். நானும் , எனது பெற்றோரும் எப்போது ராசியானோம் என்றால் திருமணமாகி 3 மாதத்தில் ராசியானோம். நானும், 1ம் எதிர்மனுதாரரும் புலியூர் எவ்வளவு காலம் இருந்தோம் என்றால் வளைகாப்பு நிகழ்ச்சி வரை அங்கு இருந்தேன். வளைகாப்பு முடிந்து குழந்தை பிறந்ததற்கு பின்னிட்டு மீண்டும் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்தேன்.

3) நான் குழந்தை பிறந்த பின்னிட்டும் நான் எனது பெற்றோர் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. நானும், 1ம் எதிர்மனுதாரரும் எப்போது தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் 2019 செப்டம்பர் மாதம் தனிக்குடித்தனம் சென்றோம். தனிக்குடித்தனம் சென்றபோது மாடியில் துணி எடுக்கசென்றபோது கீழே விழுந்து விரல் அடிப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அடித்துதான் உடைந்தது. நாங்கள் தனிக்குடித்தனம் செல்வதற்கு முன்பே 1ம் எதிர்மனுதாரர் அவரது ஊரில் சொந்தமாக வீடு கட்டி முடித்தார் என்றால் சரிதான். கீழே விழுந்து கை அடிப்பட்டபோது நான் அனன்யா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் அடித்து வலி தாங்கமுடியாததால் மறுநாள் மருத்துவமனைக்கு சென்றேன்.

4) நான் சிகிச்சை எடுத்து கொண்ட மருத்துவரிடம் கீழே விழுந்து அடிப்பட்டதாக சொன்னேன் என்றால் 1ம் எதிர்மனுதாரர் அழைத்து செல்லும்போதே மருத்துவர் கேட்டால் அவ்வாறு சொல்லவேண்டும் என்று மிரட்டி அழைத்து சென்றதால் நான் அவ்வாறு சொன்னேன். 1ம் எதிர்மனுதாரர் புதிதாக வீடு கட்டும்போது நான் எங்கு இருந்தேன் என்றால் வீடு கட்டுவதற்காக பணம் வேண்டுமென்று சொல்லி என்னை அடித்து என் அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்தார். என்னுடைய புகார் மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பத்தி 6ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யான சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. பத்தி 7ல் சொல்லியுள்ள சங்கதிகளான புது வீட்டிற்கு தேவையான பொருட்களை கொண்டு வந்ததால் தான் வாழ முடியும் என்று சொல்லி அடித்து கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

5) என்ன காரணத்திற்காக என்கையை அடித்தார் என்றால் நான் தண்ணீர் பிடித்து கொண்டிருக்கும்போது தாமதமானதால் அடித்து , விரலை உடைத்தார். காரணம் இல்லாமல் என்னை அடிப்பார். பத்தி 7ல் வீட்டிற்கு தேவையான பொருட்களை கொண்டுவந்தால் தான் என்னுடன் வாழ முடியும் என்றும், சொல்லி அடித்து உதைத்து என் கை விரலை உடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஒவ்வொரு முறையும் ஏதாவது காரணம் சொல்லி என்னை அடிப்பார். எந்த காரணத்திற்கு என்று குறிப்பிடாமல் அடிப்பார். பணம் கேட்டுதான் என்னை அடித்தார். அவ்வாறு சொல்வது பொய் என்றும், நான் கீழே விழுந்ததால் தான் விரல் அடிப்பட்டது என்றும், அதனால்தான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6) திருமணத்திற்கு பின்னிட்டு 1ம் எதிர்மனுதாரர் என் மேல் பாசமாகவும், அன்பாகவும் நடந்து கொண்டார் என்றும், நான்தான் என் அம்மாவின் பேச்சை கேட்டு 1ம் எதிர்மனுதாரரை மதம்மாற கட்டாயப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கான தேவை இல்லை. இஸ்லாம் மதத்திற்கு மாறினால்தான் என்னோடு வாழமுடியும் என்று கட்டாயப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்புலனாக செயல்படுவது எனது அம்மா என்று சொன்னால் சரியல்ல. குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி நான் மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றும், அந்த வழக்கு தள்ளுபடி ஆனது என்று சொன்னால் சரிதான். நான் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக கரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்துவதாக புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான்.

7) மேற்படி புகாரானது மகிளா நீதிமன்றத்தில் சிசி எண்.66/2020 கோப்பிற்கு எடுக்கப்பட்டு தள்ளுபடி ஆனது என்று சொன்னால் சரிதான். பத்தி 10ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யான சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. அது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்லும் சங்கதிகள் உண்மையாக இருந்திருந்தால் காவல் நிலையத்தில்புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சமூக நல அலுவலரிடம் புகார் கொடுத்தேன்.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

தற்போதும் என்னை பின்தொடர்ந்து மிரட்டி வருகிறார். எனக்கு உடல்ரீதியாக எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. தற்போதும் எனக்கு உடல்ரீதியாக பிரச்சனை இருந்து வருகிறது. நான் அறுவை சிகிச்சை செய்துள்ளேன். அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆவணங்கள் உள்ளது.

8) நான் திருமணத்திற்கு முன்பு செல்போன் கடையில் வேலைக்கு சென்று மாதம் ரூ. 10 ஆயிரம் சம்பாதித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. ரூ. 4 ஆயிரம் தான் வாங்கி வந்தேன். அதுவும் தற்போது இல்லை. எனக்கு எந்த குடும்ப வன்முறையும் நடக்கவில்லை என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் எந்த குடும்ப பிரச்சனையும் செய்யவில்லை என்றும், அதனால்தான் நான் கொடுத்த புகாரில் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி ஆனது என்று சொன்னால் சரியல்ல. புகாரை தாக்கல் செய்வதற்கான காரணமே 1ம் எதிர்மனுதாரை மதம் மாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் தான் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நாளது தேதிவரை 1ம் எதிர்மனுதாரர் என்னோடு சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும், நான்தான் மதம் மாறினால் சேர்ந்து வாழுவேன் என்று சொல்லி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அவரையே பராமரிக்க முடியாமல் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அவர் வட்டி தொழில் செய்து வருகிறார். நான் தற்போதும் செல்போன் கடையில் வேலைக்கு சென்று மாதம் ரூ.10 ஆயிரம் சம்பாதித்து வருகிறேன் என்றும், என்னால் என்னை பராமரிக்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் வீட்டில் இருந்து வருகிறேன்.

9) நான் என் அம்மாவின் பேச்சை கேட்டு தன்னிச்சையாக பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எந்த குடும்ப வன்முறையும் நடக்கவில்லை என்றும், அதனால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC),
கரூர்.